International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 03 July to September 2024 www.irjtsjournal.org

# மதசார்பின்மை வாதம்: இந்திய சூழலில் இருந்து ஒரு பாடம் கற்றுக்கொள்ளுதல் மதசார்பின்மை என்பது இலங்கையின் இனநல்லிணக்கத்திற்கான ஒரு வழியாகுமா?

T. Mohamed Mufas,
*Temporary Tutor at 4S Academy,*
*Sri Lanka.*

**ஆய்வுச் சுருக்கம்**

பெரும்பாலான தென்னாசிய நாடுகளில் மதமானது அரசு அந்தஸ்தினை கொண்டதாக காணப்படினும் இந்தியா தன்னை மதச்சார்பற்ற நாடாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளது. அந்த வகையில் இலங்கை நாடானது பல்லின மக்களை கொண்டு காணப்படுகின்றது. அதாவது சிங்களவர், தமிழர், முஸ்லிம் முதலிய பல்லின மக்கள் வாழ்ந்தாலும் வரலாற்று வளர்ச்சியில் பெரும்பான்மை - சிறுபான்மை என்ற ரீதியில் பல்வேறு முரண்பாடுகள், கலவரங்கள் அவ்வப்போது நடைபெற்றுவந்திருக்கின்றது. அதிலும் குறிப்பாக 30 வருட கால யுத்தமானது பல்வேறு முரண்பாடுகளை பல்லின மக்களிடையே ஏற்படுத்தியிருந்தது. இவை இழப்புகளேயே அதிகமாக ஏற்படுத்தியுள்ளன. ஆயினும் தீர்வுகள் இன்னும் நிலைநாட்டப்படாமல், முரண்பாடுகளுக்கு பின்னரான சமாதான நிலையைப் பேணுவதிலும் பல்வேறு சவால்களை இலங்கை எதிர்கொண்டாலும். இவ்வாறான முரண்பாடுகள் இனங்களுக்கிடையில் ஏற்படுவதை குறைப்பதில் கவனம் செலுத்துகின்ற போது இந்தியாவில் காணப்படுகின்ற மதசார்பின்மை கோட்பாட்டு நடைமுறை இலங்கையிலும் பிரதிபலிக்கப்படுமாயின் பல்வேறு சாதக நிலை இனங்களுக்கிடையில் ஏற்படக் காரணமாக அமையும் முக்கிய அம்சமாக மதச்சார்பின்மை வாதம் என்ற எண்ணக்கரு அமையப்பெறும். ஆகவே இக்கட்டுரையில் நாம் மதச்சார்பினை வாதம் அதன் தோற்றம்இ இந்தியாவில் அதன் நடைமுறை மற்றும் அது எதிர்கொள்ளும் சவால்கள், இலங்கையின் மதம் சார் ஏற்பாடுகளும் மதசார்பின்மைக்கான சாத்தியப்பாடுகளும் எனப் பல்வேறு விடயங்கள் தன்னகத்தை கொண்டு இக்கட்டுரை அமைய பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள்** : மதச்சார்பின்மை, இந்தியா, இலங்கை, பல்லின மக்கள், மதவாதம்

## 1. அறிமுகம்

சமகாலத்தில் அரசியல் கருத்தியல்களில் மதசார்பின்மை வாதம் என்ற எண்ணக்கருவானது அதிகமாக தேசங்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்ற ஒரு விடயமாக காணப்படுகின்றது. மதசார்பின்மை வாதம் என்பதனை சுருக்கமாக குறிப்பிடின், "சமயத்தையும் அரசியலையும் ஒன்று கலக்காமல் வைத்திருப்பதனை" சுட்டிக்காட்ட பயன்படுத்தப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. சமயம் அரசியலுக்குள் பிரவேசித்தல், அரசியலுக்காக சமயத்தினை ஒரு ஊடகமாக பயன்படுத்திக் கொள்ள முற்படும்போது சமய முரண்பாடுகள் எழுவதற்கு இந்நிலை காரணமாக அமையலாம் என்ற எடுகோளின் விளைவாகவே தற்காலத்தில் மதசார்பின்மை வாதம் தொடர்பான ஈடுபாடு உலக நாடுகளிடையே அதிகரித்து வருகின்றது. அதாவது அரச துறைக்கு மதத்தின் அழுத்தங்களோ, மதத்திற்கு அரசின் அழுத்தங்களோ இல்லாமல் இவை இரண்டும் ஒன்றிற்கொன்று வேறுபட்ட சுயாதீனமான இரு துறைகளாகக் கருதப்பட வேண்டும் என்ற சிந்தனையை வெளிப்படுத்தும் ஒரு கருத்தியலாகவே இது அமையப்பெற்றுள்ளது (யோகராஜா, 2020).

இக்கருத்தானது பல மேற்கேத்தேய நாடுகளில் பேசப்படுகின்ற போதிலும் மிக முக்கியமாக இந்தியா இதனை சட்ட ரீதியில் உள்வாங்கி நடைமுறைப்படுத்தி வருகின்றமையானது குறிப்பிட்டுக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். அதாவது இந்தியா ஒரு ஜனநாயக நாடாகவும் மிகப்பெரிய நிலப்பரப்பையும் பல்லின மக்களையும் கொண்ட உலகில் மிகப்பெரிய நாடாக விளங்குவதன் காரணமாக மதசார்பின்மை வாதக் கருத்தியல் தொடர்பான நீண்ட கலந்துரையாடல் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்ததோடு அந்த அடிப்படையில் அரசு மதசார்பற்ற இயல்பினை கொண்டிருக்க 1976 இல் கொண்டுவரப்பட்ட 42 ஆம் திருத்தத்தில் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட சீர்திருத்தத்திலும் இணைக்கப்பட்டது (யோகராஜா, 2020). இது ஜனநாயகத்தில் முக்கியத்துவம் பெறுவதைப் போன்று இந்தியாவின் அரசியலமைப்பில் ஓர் அடிப்படை கோட்பாடாகவும் இன்று வரையில் காணப்பட்டு வருகின்றது.

இந்த நோக்கு நிலையில் இலங்கையானது இந்தியாவிற்கு அண்மித்த நாடாகவும் நீண்டகால வரலாற்றுத் தொடர்பினை உடையதாக காணப்படுகின்றது. இவ்வாறு இருந்த போதிலும் இலங்கையில் பல்லின சமூக கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு மதசார்பின்மையை கொண்டுவராமை அதற்கு மாற்றமாக சிங்கள மதத்தினை அரச மதமாக அங்கீகரித்தமை கலந்துரையாடப்பட வேண்டிய விடயமாகக் கொண்டு இவ்வாய்வு முன்கொண்டு செல்லப்படுகின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

இலங்கையானது பன்மைத்துவ நாடாக காணப்படுவதனால் இங்கு அனைத்து இன மக்களையும் ஒருங்கிணைத்து செல்வதற்கு பதிலாக பௌத்த மதத்தினை அரசியலமைப்பினுடாக பாதுகாப்பது அரசின் பிரதான கடமையாக குறிப்பிட்டு



© 2024, IRJTSR 

ஏனைய மதத்தினை கவனிக்காமை இனங்களுக்கிடையில் பாரிய முரண்பாடுகளை உருவாக்கி வருகின்றது. ஆகவே பல்லின மக்களை கொண்ட இலங்கையில் ஒரு இன மக்களை மாத்திரம் முதன்மைபடுத்தியமையும் அவ்வாறே ஏனைய இன மக்களை இரண்டாம் நிலைக்கு தள்ளியமையும் இனங்களுக்கிடையில் முரண்பாட்டினை உருவாக்கியுள்ளது என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### 3. ஆய்வின் நோக்கம்

இலங்கையில் காணப்படுகின்ற மதசார்புத்தன்மையினை புரிந்து கொள்ளுதல் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் மதசார்பின்மை எவ்வாறான நிலையினை கொண்டுள்ளது என்பதனை வெளிக்கொண்டு வருதல், இந்தியாவின் மதசார்பின்மை கோட்பாட்டு பிரயோகம் அதற்கு அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள சவால்கள் இந்தியாவின் மதசார்பின்மையை இலங்கையுடன் ஒப்பீட்டு நோக்கி இலங்கையின் நிலைப்பாட்டை அறிதல் முதலிய நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது.

### 4. ஆய்வு முறையியல்

ஆய்வுக்கு மிக முக்கியமாக அமைவது ஆய்வு முறையியலாகும். அத்தோடு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் இன்றியமையாதவையாகும். இத் தரவுகளே ஆய்வின் நம்பகத்தன்மை, உறுதிப்பாடு அடைந்து கொள்ள உறுதுணையாக காணப்படுகின்றன. இதன்படி இவ் ஆய்வானது தரவு சேகரிப்பு முறை மற்றும் தரவு பகுப்பாய்வு முறை என்பவற்றைக் கருத்தில் கொள்கின்றது. இதன்படி இவ் ஆய்வானது முதலாம் நிலைத்தரவுகளாக இத்துறைசார் நிபுணர்கள் மற்றும் விமர்சகர்களிடம் நேர்காணலின் மூலமாக பெறப்பட்டுள்ள தரவுகள் அவ்வாறே இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளத் தரவுகள் போன்றவற்றின் மூலமாக பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### 5. மதசார்பின்மை வாதம் பற்றிய பார்வை

அண்மைக்காலங்களில் பல்லின மக்களைக் கொண்ட நாடுகளில் மதசார்பின்மை என்ற எண்ணக்கரு பேசுபொருளாக காணப்படுகின்றது. அந்தவகையில் தென்னாசிய நாடுகளிலும் இதன் தாக்கம் உள்ளதனை அவதானிக்க முடிகின்றது. மதசார்பின்மை வாதமானது ஐரோப்பாவின் பதினெட்டாம் 19ஆம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்றது. அது ஐரோப்பிய ஞானிகளிலிருந்து தோற்றம் பெற்ற சிந்தனாவாத பகுதியினரே இதன் ஆரம்ப கருத்தாக்களாவர். இதன்படி மதசார்பின்மை வாதம் தோற்றம் பெறுவதற்கு பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றனர். ஒன்று, ஐரோப்பிய மதசார்பின்மை வாதம் மத்திய காலத்தின் இறுதியில் பிரதான அங்கமாக அரசு மற்றும் திருச்சபைகளுக்கு இடையில்

காணப்பட்ட நிறுவன இணைப்பின் மீது அரசாட்சியின் காவலனாக திருச்சபை இருந்தமைக்கு எதிராக வளர்ச்சியுற்றதோர் கருத்தியலே மதசார்பின்மைவாதம் ஆகும் (யோகராஜா, 2020). அதேபோன்று இரண்டாவது, ஐரோப்பிய மறுமலர்ச்சி யுகத்தில் தோன்றிய தர்க்க அறிவுக்கு முதலிடம் கொடுத்தமையை சுட்டிக்காட்ட முடியும் இது திருச்சபையை முன்னெடுத்துச் சென்ற அஞ்ஞான ரீதியான ஆதிக்கத்திற்கு எதிரானதாகும். இச்சிந்தனாவாத குழுவினரில் மக்கியவல்லி முதன்மை பெறுகின்றார். அரசியலை மத ஒழுக்கக் கோட்பாடுகளில் இருந்து வேறுபடுத்தியமையே இவர் அரசியலுக்கு ஆற்றிய பணிகளில் முக்கியமானதாகும் (யோகராஜா, 2020). இதன்படி மறுமலர்ச்சி காலத்தில் தோற்றம் பெற்ற மதசார்பின்மை வாதமானது தாராள மதசார்பின்மை வாதம் மற்றும் பொதுவுடமை மதசார்பின்மை என இரு பிரிவுகளில் நோக்கப்பட்டது. அதாவது தாராள மதசார்பின்மை வாதமானது தனியார் சுதந்திரத்தையும் சிந்தனை மற்றும் மனசாட்சியை பின்பற்றும் சுதந்திரத்தை வலியுறுத்தும் ஓர் தத்துவமாகும். இங்கு கட்டுப்பாடுகள் வரையறைகள் என்பது காணப்படமாட்டாது இதனால் மதத்தின் மூலம் அரசில் தலையிடுவது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அரசையும் திருச்சபையையும் நிறுவன ரீதியாக வேறாக்க வேண்டும் என இக்கருத்தியல் வலியுறுத்துகின்றது. இதனால் அரசின் தன்மை அதன் கொள்கை என்பவற்றை தீர்மானிப்பதில் மதம் தலையிடக்கூடாது எனப்பட்டது. மத விடயங்களில் அரசு தலைகிடக்கூடாது என கருதப்படுகின்றது (யோகராஜா, 2020).

அடுத்த பிரிவான சமவுடைமைவாதத்தின்படி மதம் சமூகத்தை துன்பத்திற்குள்ளாக்கும் ஒரு நிறுவனம் எனவும் இது உலகம் பற்றிய தவறான விளக்கம் ஒன்றை துன்பத்திற்குள்ளான மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் ஓர் கருத்தியல் தொகுதி எனக்குறிப்பிடுகின்றது. அதன் காரணத்தினால் இங்கு நாம் நோக்குவது யாதெனில் அரசு முழுமையாக சமயத்திலிருந்து வேறுபடுத்தப்பட்டடிருக்க வேண்டும் என்பதேயாகும். அதாவது இங்கு மதமானது அரசின் அனுமதியுடனேயே நிலவ முடியும் என்ற கருத்தினை குறிப்பிட விளைவதை அவதானிக்கலாம். ஆகவே சமயம் சார், அரசியல் சார் அரசியல் நிறுவனங்களுக்கு இருப்புக் கிடையாது. அரசின் தீவிர மேற்பார்வையின் கீழ் அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் மட்டுமே பொதுவுடைமைவாதத்தில் சமய நிறுவனங்களுக்கு இருப்பு கிடைக்கும். சமய அடையாளத்துடன் அரசியல் மற்றும் சிவில் சமூக இயக்கங்களை நிறுவுவதற்கு அனுமதி கிடையாது (யோகராஜா. 2020). எனவும் இப்பிரிவு எடுத்துரைக்கின்றதனை நாம் அவதானிக்க முடிகின்றது.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது உலகில் மதச்சார்பின்மைவாதத்திற்கு பேர்போன நாடாக இந்தியா விளங்குகின்றது. இங்கு தாராளவாத சிந்தனையின் அடிப்படையில் மதச்சார்பின்மைவாதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மதங்களையும் பக்கசார்பின்றி கவனிக்க வேண்டும். இது அறிநெறி சார்பின்மை என்பதாகும். சகல மதங்களும் சமமானவை என ஏற்றுக் கொள்ளும் சர்வ அறிநெறிகளினதும் சேர்க்கை என்ற

எண்ணக்கருவினால் வெளிப்படுத்தப்பட்டது. தனிநபர்களின் சமய அடையாளங்களை கவனத்திற் கொள்ளாது அரசானது சகல பிரஜைகளையும் சமமாக மதிப்பளித்தல் வேண்டும். பிரஜைகளின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் போது எந்தவொரு பிரஜைக்கும் தமது சமய அடையாளங்கள் தடையாக இருக்கமாட்டாது. 1976 ஆம் ஆண்டு நாற்பத்தியிரண்டாம் யாப்புத் திருத்தத்தில் இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (யோகராஜா, 2020). அவ்வாறான ஏற்பாடுகளை உருவாக்கியிருந்தாலும் இந்தியாவில் மதசார்பின்மை வாதமானது நடைமுறையில் பாரிய சவால்களை காலத்திற்குக் காலம் எதிர் கொண்டு வருகின்றது அதன் விளைவாக அண்மைக்காலமாக மதசார்பின்மை தொடர்பான விமர்சனம் பரவலாக அதிகரித்து வருகின்றது.

## 6. கலந்துரையாடல் (Discussion)

இலங்கையில் மதசார்பின்மை வாதத்தின் சாத்தியப்பாட்டினை கண்டறியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது நிபுணர்களுடனான நேர்காணல் மூலமாகவும் அதேபோன்று இது தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றினூடாக பெறப்பட்ட தகவல்களைக் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு விடயங்கள் பெறப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

### 6.1 மதசார்பின்மை பற்றி இலங்கையின் சாத்தியப்பாடுகள்

இலங்கை நாடானது பல்லின மக்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டது. இலங்கையினை பொருத்தமட்டில் சமஸ்டி ஆட்சியென சிறுபான்மை மக்களும் ஒற்றை ஆட்சி சிறப்பானது என பெரும்பான்மை மக்களும் முரண்பட்டுக் கொள்கின்ற வேளையில் மதச்சார்பின்மை அல்லது மதச்சார்பான நாடா இலங்கை என்ற விடயதானம் ஆரம்பகாலம் தொட்டு பேசப்பட்டிருப்பினும் 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்பின் அறிமுகத்தின் பின்னணியில் தெட்டத்தெளிவாக மதசார்பான நாடு என்பது அரசியலமைப்பின் மூலமாக வெளிப்படுத்தியிருந்தது. இதன்படி இவ் அரசியல் திட்டதிலேயே முதன் முதலாகப் பௌத்த மதம் அரசமதம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதாவது பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாப்பது அரசின் தலையாயக் கடமையென்றும் அதேவேளை ஏனைய மதங்கள் சுதந்திரமாக செயற்படலாம் என்றும் கூறப்பட்டது. அவ்வாறே தற்போதைய இரண்டாம் குடியரசு யாப்பிலும் பௌத்த மதத்தினை அரச மதமாக பிரகடனப்படுத்தி அரசியல் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இதில் இலங்கையின் முதன்மை மதமாக பௌத்த மதம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் பௌத்த சாசனத்தை பேணி வளர்த்தலும், பாதுகாத்தலும் அரசின் கடமையாகும் எனக் கூறப்பட்டு அதேவேளை ஏனைய மதங்களின் சுதந்திரங்களும் அதன் வழிபாட்டு உரிமைகளும் பேணப்படும் எனவும் கூறப்பட்டது. அத்துடன் இங்கு பௌத்த மதம் பற்றிய இவ் ஏற்பாட்டில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் 2/3

பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதுடன் மக்கள் தீர்ப்பு ஒன்றுடன் மக்களின் அங்கீகாரமும் அதற்கு அவசியமென கூறப்பட்டது. பல மதங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் ஒரு மதத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது மத ரீதியான முரண்பாடுகளை வளர்க்கும் என இது தொடர்பாக பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது (யோதலிங்கம், 2019). இவற்றினை கருத்தில் எடுக்கின்ற போது இலங்கையானது மதசார்பின்மை கருத்தியலை யாப்பினுடாக உள்வாங்கவில்லை என்பது தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது.

ஆகவே, தற்போதய அரசியல் அமைப்பிலுள்ள இம்மதம் தொடர்பான ஏற்பாடு பல மதங்கள் வாழ்கின்ற நாட்டிற்கு உகந்தது அல்ல எனப் பலராலும் குற்றம் சாட்டப்பட்டது. பல மதங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்கின்ற எமது நாட்டில் ஒரு மதத்திற்கு மட்டும் அரச அந்தஸ்தினைக் கொடுப்பதானது ஏனைய மதத்தவர்களிடையே அதிருப்திகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்த வல்லது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. இங்கு பெருப்பான்மை மக்களின் பௌத்த மதத்தினை அரச மதமாக்க வேண்டும் என்ற சிங்கள பௌத்த மக்களின் நீண்டகால கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. அத்தோடு பௌத்த மதத்தினைப் பேணிப் பாதுகாப்பது அரசின் கடமை எனக் கூறப்பட்டுள்ளமையானது அதன் அபிவிருத்திக்கு வாய்ப்புக்களை இவ்வரசு திறந்து கொடுத்துள்ளது. ஆயினும் இதற்கு மாற்றமாக இதனை நோக்குவோர் பல்லின மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் பௌத்த மதத்தைப் பாதுகாப்பது அரசின் கடமை எனக் கூறப்பட்டமையானது ஏனைய மதம் தொடர்பாக அரசிற்கு எதுவித பொறுப்பும் இல்லை என்ற அர்த்தத்தை கொடுத்து விடுகின்றது. ஏனைய மதங்கள் அபிவிருத்தி அடைவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமற் போகிறது என்பதனை சுட்டிக்காட்ட முனைகின்றனர்.

இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள இனங்களுக்கிடையிலான முரண்பாடு இனங்களுக்குள்ளான ஒற்றுமையை சிதைக்கச் செய்துள்ளது இதற்கான முக்கிய காரணமாக இருப்பது பௌத்த மதம் அரச மதமாக நோக்கப்படுவதனால் அரசியல் செயல்நெறிகள் அனைத்திலும் மதத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக மதவாத அமைப்புகள், அமுக்கக் குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் எனப் பலதரப்பட்ட தரப்பினர்களின் தாக்கம் இலங்கை அரசியல் செயற்பாடுகளில் அவதானிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, பொதுபலசேனா அமைப்பு, ஜாதிக ஹெல உறுமய, மகாசங்கங்கள் முதலிய அமைப்புக்களின் செயற்பாடுகள் பௌத்த மதத்தினை நிலை நிறுத்துவதில் அதிகமாக பங்காற்றுகின்றது அதன் காரணமாக ஏனைய மக்களின் அடிப்படை உரிமைகளில் தாக்கம் செலுத்தும் நிலையினை அடைந்துள்ளது. இதனால் இனங்களுக்கிடையில் ஒற்றுமை, நல்லிணக்கம் முதலியன ஏற்படாமல் இன ரீதியான விரிசல் ஏற்படுவதனையே காணமுடிகின்றது. குறிப்பாக, இவ்வாறாக இலங்கையில் மதசார்பான கருத்தியல் எல்லா மட்டங்களிலும் காணப்படுவதானது பாரிய சவாலாகவே நோக்கப்படுகின்றது. இதிலிருந்து மீள்வதற்கு இந்தியாவின் மதசார்பின்மை


© 2024, IRJTSR

கருத்தியலினை கோட்பாட்டு ரீதியில் அரசியல் திட்டத்தின் ஊடாக கொண்டுவந்து அனைத்து மதங்களையும் பாதுகாக்கும் பொறுப்பினை அரசு உறுதிப்படுத்தி இனங்களுக்கிடையில் ஏற்படுகின்ற கசப்பான நிகழ்வுகளை நீக்கி சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தனை உருவாக்க மதசார்பின்மை வாதம் சமகாலத்தில் இலங்கைக்கு அத்தியவசியமானதாகும்.

### 6.2 இந்தியாவில் மதச்சார்பின்மை அரசியலமைப்பு ஏற்பாடு

தென்னாசியாவில் உள்ள பெரும்பாலான நாடுகளில் யாப்புகளில் மதமானது அரசினுடைய அந்தஸ்து பெற்று திகழ்கின்றது உதாரணமாக இலங்கையினை பார்க்கலாம் இதற்கு மாற்றமாக இந்தியாவில் சமய சார்பற்ற அரசு அமைக்கப்பட்டுள்ளது. இது அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு சிறப்பம்சமாக காணப்படுகின்றன. அதன் அடிப்படையில் இந்தியாவினை பொறுத்தமட்டில் தாராண்மை வாத சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டே மதசார்பின்மை இந்தியாவில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் சரத்தில் ஒவ்வொரு மதப்பிரிவினதும் செயல்பாடுகள் ஏனைய மதப்பிரிவினை பாதிக்காத வகையிலும் மதத்தை மக்கள் மீது திணிக்காத வகையிலும் கையாளப்பட வேண்டுமென்று கூறப்படுகின்றது. இதனை மீறும் மதப்பிரிவுகள் மீது அரசின் தடை ஏற்புடையதாக விளங்குகின்றது. ஆனால் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் சரத்தில் இந்து நிறுவனங்கள் இந்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது (கணேசலிங்கம், 2008). அந்த வகையில் இந்திய மதச்சார்பின்மையின் பிரதான பண்புகள் என பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம். அதாவது இங்கு அரசியல் திட்டத்தின் 42வது அரசியலமைப்பு திருத்தத்தின் விளைவாக அரசியலமைப்பின் முகப்புரையில் “சமதர்ம”, “சமயசார்பற்ற” என்ற இரண்டு வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்திய நாடு சமய சார்புள்ளதோ, அற்றதோ, சமயத்தை எதிர்ப்பதோ அல்ல. சமயக் கோட்பாடுகளின் நடவடிக்கைகளிலிருந்து விலகி நிற்கிறது. இவ்வாறு சமயம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அரசு நடுநிலை வகிக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் தான் விரும்பும் எந்த முறையிலும் வழிபாடு செய்ய உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சமய சார்பற்ற தன்மை என்பது சமய நம்பிக்கைகள் எதையும் அரசு ஏற்காமல் நடுநிலை வகிப்பதையே குறிக்கும் (பளீல் et al., 2020).

இந்திய அரசியலமைப்பில் மதச்சார்பின்மை ஏற்பாட்டினை பின்வருமாறு நோக்க முடியும். அந்த வகையில் இந்தியாவானது அரசியலமைப்பு ரீதியாக, எந்த மாநில மதமும் இல்லாத மதச்சார்பற்ற நாடு என்ற உண்மையை அது கூறுகிறது. மேலும், இந்தியா அனைத்து மதங்களையும் ஏற்கும் என்றும், எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் ஆதரிப்பதில்லை என்றும் கூறுகிறது. இங்கு அரசியலமைப்பின் பின்வரும் ஏற்படுகளை நோக்குமிடத்து தெளிவாகின்றது. பிரிவு 14 மற்றும் 15 - பிரிவு 14, சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் அனைத்து சட்டங்களின் பாதுகாப்பையும் அனைத்து மதங்களுக்கும் வழங்குகிறது. மேலும் பிரிவு 15யில்


© 2024, IRJTSR

இனம், மதம், பாலினம், சாதி அல்லது பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடை செய்கிறது. பிரிவு 16 (1), பொது வேலைவாய்ப்பில் அனைத்து குடிமக்களுக்கும் சம வாய்ப்புகளை உத்தரவாதம் செய்கிறது மற்றும் பாலினம், மதம், சாதி, வம்சாவளி, பிறந்த இடம் மற்றும் வசிப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த பாகுபாடும் இருக்காது எனவும் பிரிவு 25, மனசாட்சியின் சுதந்திரத்தை வழங்குகிறது. பிரிவு 26, ஒவ்வொரு மதக் குழுவிற்கும் மத நோக்கங்களுக்காக நிறுவனங்களை பராமரிக்கவும் நிறுவவும் உரிமை உண்டு. பிரிவு 27, எந்தவொரு மத நிறுவனம் அல்லது மதத்தின் பராமரிப்பு அல்லது பதவி உயர்வுக்கு கூடுதல் வரி செலுத்துமாறு எந்த குடிமகனையும் அரசு கட்டாயப்படுத்தாது. பிரிவு 28, பல்வேறு மத குழுக்களால் பராமரிக்கப்படும் கல்வி நிறுவனங்கள் மத போதனைகளை வழங்க அனுமதிக்கிறது. பிரிவுகள் 29 மற்றும் 30, சிறுபான்மையினருக்கு கல்வி மற்றும் கலாச்சார உரிமைகளை வழங்குதல். பிரிவு 51 (ஏ), இந்தியாவின் அனைத்து குடிமக்களும் நல்லிணக்கத்தையும் பொதுவான சகோதரத்துவ உணர்வையும் மேம்படுத்தி, கலப்பு கலாச்சாரத்தின் செழுமையான பாரம்பரியத்தை மதிக்கவும் பாதுகாக்கவும் கட்டாயப்படுத்துகிறது (Balaji, 2023). இவ்வாறான ஏற்பாடுகளை இந்தியாவின் அரசியல் யாப்பானது வெளிப்படுத்தியுள்ளது இதன் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மதசார்பின்மை வாதக் கருத்தியல் இங்கு பேசப்பட்டு வருகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை நோக்குமிடத்து ஒன்று, தாரண்மை மதச்சார்பின்மை வாதத்தின் கோட்பாட்டு ரீதியான அடிப்படை அனைத்து மதங்களையும் பக்கச்சார்பின்றி பார்ப்பதாகும் இதனை இந்திய மொழியில் அது அறநெறி சார்பின்மை என அடையாளப்படுத்தல். இரண்டாவது, சகல மதங்களையும் சமமாக மதித்தல் அதாவது சகல மதங்களையும் மதித்தல் வேண்டும் இது குறிப்பிடுவதாவது சகல மதங்களையும் சமமானவை என ஏற்றுக்கொள்வதாகும். இது சர்வ அற நெறிகளினதும் சேர்க்கை என்ற எண்ணக்கருவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது இங்கு தனி நபர்களின் சமய அடையாளங்களை கவனத்தில் கொள்ளாதே அரசனது சகல பிரதிநிதிகளையும் ஒரே சமமாக மதித்தல் வேண்டும் பிரஜைகள் தங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் போது எந்தவொரு பிரஜைக்கும் தமது சமய அடையாளங்கள் தடையாக இருக்கமாட்டாது என வலியுறுத்தி நிற்பதனை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

### 6.3 இந்தியாவில் மதச்சார்பின்மைவாதத்திற்கு ஏற்படும் சவால்கள்

இந்தியாவினை பொருத்தமட்டில் மதசார்பின்மை கோட்பாட்டு வடிவில் காணப்படினும் அதனை நடைமுறைப்படுத்துவதில் பாரிய சவால்களை இந்தியா கடந்த காலத்திலும் இன்றும் பாரிய தவறுகளை விட்டுவந்திருக்கின்றது அதிலும் குறிப்பாக மதசார்பின்மைக்கு எதிராக பல அமைப்புகள் சித்தாந்த ரீதியில் நாளாந்தம் செயற்பட்டு இந்தியாவில் இக்கருத்தியலை சிதைக்கும் குறுகிய

நோக்கில் அரசியல் அஜந்தாவுடன் இனைந்து செயற்பட்டுவருவது பாரிய சர்ச்சையாக அண்மைக் காலத்தில் விமர்சிக்கப்படுகின்றது. அந்தவகையில் குறிப்பாக தென்னாசிய நாடுகளின் அரசியலை நிர்ணயிக்கும் முக்கிய சமூக காரணியாக மதம் விளங்குகின்றது. இந்நாடுகளது நவீன வரலாற்றை அவதானிக்கும்போது மதத்தைப் பின்னணியாகக் கொண்ட மத இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் அமுக்கக் குழுக்களும் உள்நாட்டில் அதிகார அரசியலின் முகவர்களாக காணப்படுகின்றனர். இந்தியாவை மதச்சார்பற்ற நாடாக இனங்காட்டுவதற்கு ஆரம்பகால அரசியல் தலைவர்கள் ஒரு சிலர் நவீனத்துவத்தை ஓர் ஆயுதமாகக் கையாள முயன்றனர். காலனித்துவ ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர் வரைந்த அரசியல் அமைப்பிலும் நவீனத்துவத்தில் சில அம்சங்களை இணைத்தனர். இருந்தபோதும் அம்முயற்சி வெற்றி அளிக்கவில்லை. மேலும் மதத்தை அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்த முயலும் குறுகிய போக்கே இன்று இந்தியாவின் மதச்சார்பின்மை என்பது அர்த்தமற்றதொன்றாக அமைவதற்கு காரணமாகியுள்ளது. இந்துமதத்திலும் சீக்கிய மதத்திலும் தீவிரவாத
38 அமைப்புக்கள் வன்முறைக் கலாசாரம் வாயிலாக அரசியல் நோக்கங்களை அடைய எத்தனிக்கின்றனர். இத்தகைய எத்தனம் அனாவசியமாக ஏனைய மதங்களுடனான முரண்பாட்டை கூர்மைப்படுத்தி உள்ளது (கணேசலிங்கம், 2008). அதிலும் இந்துத்துவ வாதமானது பல பரிமாணங்களை எடுத்துவருவதுடன் இந்துத்துவ சிந்தனை அனைத்து நிலைகளிலும் பிரதிபலிக்க எத்தனிப்பதனை அவதானிக்க முடிகின்றது.

இந்தியாவில் மதத்தின் பெயரால் பல பாதக விளைவுகள் கடந்த காலங்களில் நடந்தேறியுள்ளன இது தொடர்பான வரலாற்று நிகழ்வுகளை மதம் தொடர்பான ஆய்வை மேற்கொண்ட ஜீவ்யின்ஸ் இந்தியாவில் மதவாதம் ஏற்படுத்திய முரண்பாட்டைப் பின்வருமாறு நினைவு கோருகின்றார். இந்தியாவின் மத அடிப்படைவாத உணர்வு மகாத்மா காந்தியை அழித்தது. அவ்வாறே இந்தியாவிலிருந்து 1947இல் பாகிஸ்தானைப் பிரித்தது 1984ஆம் ஆண்டு சீக்கிய மேலாதிக்க வாதத்தை எதிர்த்த இந்திராகாந்தியை சீக்கிய ஆயுத பாணியினர் அழித்தனர். 1992ஆம் ஆண்டு பல நூற்றாண்டு பழைமை வாய்ந்த பாபர் மசூதியை உடைத்தெறிந்துவிட்டு ராமர் (Ramar) பெயரால் பெரும் அழிவை ஆயுதம் தாங்கிய இந்துக்கள் (Militamt Hindu) ஏற்படுத்தினர். இதே போன்று 1991ஆம் ஆண்டு ராஜீவ்காந்தியும் இலங்கையில் ஏற்பட்ட இந்து தத்துவ பௌத்த முரண்பாட்டின் தீர்வுக்கான அணுகுமுறையால் கொல்லப்பட்டார் (கணேசலிங்கம், 2008). இவ்வாறான நிகழ்வுகள் இந்தியாவின் மதசார்பின்மைக்கு சவால்களை ஏற்படுத்தும் வரலாற்று சான்றாகவுள்ளது.

தற்காலத்தில் இந்திய அரசியலமைப்புக்கு மாறான அதாவது மதச்சார்பின்மை என்பதற்கு மாற்றமான இந்துமதவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியே ஆட்சியிலுள்ளது. அதன் தோழமை அமைப்பான ராஜ்ரிய சேவாசங் (Rashtriya Swayamsevak Sangh - RSS) இந்தியாவை ஓர் இந்து தேசமாகவும் இந்து இராச்சியமாகவும் ஆக்குவதற்கான திட்டமிடலுடன் செயல்பட்டு வருகின்றது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR

ஆர்.எஸ்.எஸ். இன் ஓர் அங்கமே பாரதீய ஜனதாக் கட்சி என்பதை 2001ஆம் ஆண்டு நாக்பூரில் நடந்த கட்சிமாநாட்டில் உரை அப்போதைய பிரதம மந்திரி அடல்பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார். அவ்வாறே இன்றும் பாரதிய ஜனதா கட்சியின் போக்கானது இந்து மதவாத கருத்தியலை ஆணித்தரமாக பேணி வருகின்றது அதிலும் இன்று மோடியின் கையில் அரசாங்கம் இருப்பது பாரிய சவாலாக நோக்கப்படுகின்றது (கணேசலிங்கம், 2008). அதன் காரணமாக மதவாத அரசியல் பிரச்சாரங்கள், இனங்களுக்கிடையிலான வன்முறைகள் அதேபோன்று இந்தி மொழித்திணிப்பு போன்ற பல செயற்பாடுகள் அண்மைக்கால மதசார்பின்மைக்கு எதிராக வளர்ந்து வருகின்றமையானது இந்தியாவின் பன்மைத்தன்மைக்கு பாரிய சவாலாகவும் மதசார்பின்மைக்கு பாதகமாகவும் அடையாளப்படுத்த முடியும்.

இன்றைய மோடியின் ஆட்சியல் மதசார்பின்மைக்கு எதிரான பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகினற்மைக்கு பாரதிய ஜனதா கட்சியின் மதம் சார் பண்பை விளங்கிக்கொள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முன்னாள் தலைவரான கோல்வால்கரின் கருத்து நினைவு கோரத்தக்கது “இனம், பண்பாடு ஆகியவற்றின் தூய்மையைக் காப்பாற்றுவதற்கு ஜேர்மனி உலகத்துக்கு அதிர்ச்சி தரக்கூடிய காரியத்தைச் செய்துள்ளது. அடிவேரிலே வேற்றுமை கொண்ட இன, பண்பாட்டுக் கூறுகளை ஓர் ஒன்றுபட்ட முழுமைக்குள் உட்கிரகித்துக் கொள்வது என்பது முற்றிலும் சாத்தியமில்லாதது என்பதை ஜேர்மனி காட்டியுள்ளது. இந்துஸ்தானில் உள்ள நாம் இந்தப்படிப்பினையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும், பயனடையவும் வேண்டும். இது ஏனைய மத, இன, கூறுக்கள் மீது செலுத்த வேண்டிய ஆதிக்க முறைமையைக் காட்டுகின்றது. இவ்வமைப்பு ஆத்மீகத்தைக் காட்டிலும் அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் அமைப்பாக விளங்குகிறது. இந்து இராச்சியம் அல்லது அகண்ட பாரதம் (இதில் இன்றைய இந்தியா, பாகிஸ்தான், வங்காளதே~, சிறிலங்கா முதலியன அடங்கும்) என்பதை உருவாக்கும் நோக்கம் கொண்டது. ஆர்.எஸ்.எஸ் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டே கட்சிகளையும் அமுக்கக் குழுக்களையும், அமைப்புக்களையும் உருவாக்கி வருகிறது. எனவே மதச்சார்பற்ற தேசமாக இந்தியாவைக் அரசியல் யாப்பின் உறுதியுரைக்கு ஏற்ப பேண முடியாத அளவுக்கு நடைமுறை அரசியலில் மதவாதம் செல்வாக்குச் செலுத்துகின்றது (கணேசலிங்கம், 2008). என்பதனை அவதானிக்கக்கூடியதாகவே உள்ளது. இவ்வாறான நிலை இந்தியாவில் தொடருமாயின் மதசார்பின்மை கருத்தியலானது எதிர்காலத்தில் பாரிய சவால்களை எதிர் கொள்ள வேண்டி ஏற்பட்டு பல்லினத்தன்மைக்கு பாரிய சவாலாக அமைந்துவிடும்.

## 7. முடிவும் பரிந்துரைகளும் (Conclusion & Recommendations)

இன்றைய சூழ்நிலையில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். எந்தவொரு பாகுபாடும் அதன் குடிமக்களின் உரிமைகளை பாதிக்காத வகையில் இந்திய அரசாங்கமும் பாராளுமன்றமும் பல்வேறு ஏற்பாடுகளை செய்துள்ளது. அவற்றில் மிகப்பிரதானமானது மதமாகும். அந்தவகையில்

மதங்களுக்கு இடையிலான ஆதிக்கத்தை எதிர்த்து 1976 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் 42 வது திருத்தத்தின் மூலம் மதச்சார்பற்ற வார்த்தை முகப்புரையில் சேர்த்துக்கொண்டது. எனவே, இந்தியா போன்ற பன்முக கலாச்சார நாட்டில் மதச்சார்பின்மைக்கு மாற்று வழிகள் இல்லாமையினால் இந்திய அரசியலமைப்பு மதச்சார்பின்மையை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்திய மாநிலங்களில் பல்வேறு மொழி மற்றும் மதத்தினைக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். அவர்களை ஒன்றாக வைத்திருக்க மதச்சார்பின்மை தேவைப்பட்டது. எனவே, சுதந்திரத்திற்கான உரிமையுடன், மதச்சார்பின்மையை ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் உருவாக்கப்பட்டதன் விளைவாக இன்று வரையில் இக்கருத்தியல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

எவ்வாறாயினும் இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமையைக் கொண்டுவரும் முயற்சி நடந்தாலும், பெரும்பான்மை சமூகங்களினால் அவ்வப்போது சிறுபான்மையினர் மீதான அநீதிக்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளாகின்றனர். அதிலும் இங்கு மதச்சார்பற்ற அரசு உருவாக்கப்பட்டதன் பின்னரும் மக்களுக்கிடையே தேசியவாத உணர்வை உருவாக்குவதில் இச்செயற்பாடுகள் பாரியளவில் தாக்கம் செலுத்துகின்றது. மாற்றமாக சிறுபான்மையினரிடையே சமூக சகிப்பின்மை பற்றிய விழிப்புணர்வு தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்றது. ஆகவே நாட்டிலுள்ள சிறுபான்மையினரிடையே தேசிய உணர்வை ஏற்படுத்த மதச்சார்பின்மை என்ற கருத்தியலானது அதிகமாக இன்று அவசியப்படுகின்றது. இருப்பினும் இந்தியா மதச்சார்பற்ற நாடு என்ற கருத்தை ஏற்றுக்கொண்டாலும், உண்மையில் மதம் அரசியலாக்கப்பட்டுள்ளது. மத நிறுவனங்கள் வாக்கு அரசியலுக்காக பயன்படுத்தப்படுகின்றன. எனவே, அதிகரித்து வரும் வகுப்புவாதத்தால் மதச்சார்பின்மை கொள்கை பின்தங்கி வருகிற ஒரு சூழ்நிலையினையே அண்மைக்காலத்தில் அவதானிக்க முடிகின்றது. இந்தியாவில் மதச்சார்பின்மை என்ற கருத்து ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதில் வேரூன்ற வேண்டும். இந்தியா போன்ற பன்மைத்துவ சமூகத்தில், மதத்தின் அடிப்படையிலான அரசியல் தேசிய ஒருமைப்பாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் ஆதலால் வலுவான ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதற்காக மத விழுமியங்களை மதித்து, சமூகத்தில் மதச்சார்பின்மையின் விழுமியங்கள் மதிக்கப்பட வேண்டும். ஆகவேதான் இலங்கையினை பொறுத்தமட்டில் அரசியலில் மதத்தின் தலையீடு அதிகரித்து வருவதானது மதச்சார்பற்ற அரசை உருவாக்குவதில் எதிர்கொள்ளும் பெரும் சவாலாகும். அதிலும் குறிப்பாக தேர்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் மதத்தின் அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்பட்டு வாக்குகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆரம்ப காலம் தொடக்கம் இலங்கை அரசியலானது மத உணர்வுகளை முன்னிறுத்தி வாக்கு அரசியல் நடத்தி வருகின்றது. எனவே, இங்கு சரியான நபர்கள் அரசியல் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இவ்வாறு தெரிவாகின்றவர்களின் செயற்பாடுகள் மதத்தின் செயல்நெறியினை அடியோட்டியதாகவே அமையப்பெறுகின்றது. அத்தோடு பெரும்பான்மை - சிறுபான்மைக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தியும்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR 

விடுகின்ற போக்கும் காணப்படுகின்றது இவ்வாறான நிகழ்வுகளினால் இலங்கையில் மதசார்பின்மையை கொண்டு வருவதில் பாரிய சவால்கள் காணப்படினும் இங்கு சிறுபான்மை சமூகமானது சிங்கள சமூகமான பெரும்பான்மையுடன் வாழ்கின்றனர். இருந்த போதிலும் மத ரீதியில் சிறுபான்மையினரின் பாதுகாப்பின்மை உணர்வுகள் குறைவதாக தெரியவில்லை.

இதனால் இலங்கையில் மதச்சார்பற்ற சமுதாயத்தை உருவாக்குவது கடினமாக உள்ளது. அவ்வாறே இந்தியாவில் வளர்ந்து வரும் மதக்கடும் போக்கு மதச்சார்பற்ற சமூகம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்றாகும். இதன்படி இலங்கையில் அனைத்து சமூகங்களும் தேசிய உணர்வுடன் ஒன்று சேராத வரையில், மதச்சார்பற்ற சமுதாயம் உருவாகுவது சாத்தியமில்லை என்பதனை உணரமுடிகின்றது. இலங்கையினை நோக்குமிடத்து கடந்த கால அனுபவங்களின் படி மதச்சார்பின்மையும் அனைத்து மதங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்த ஒரு வழிமுறையாக தோன்றுகின்றது இருப்பினும் அரசியலமைப்பின் அனைத்து மதங்களும் சமமாக நோக்கப்படும் ஏற்பாடுகளை கொண்டுவருவதுடன் பௌத்த மதத்தின் முன்னுரிமை நீக்கப்படல் வேண்டும். அதனை அடியோட்டியதாக "மதச்சார்பற்ற" என்ற வார்த்தையினை பிரகடனப்படுத்தல் அரசின் கடமை எனவும் அரசாங்க நிறுவனங்களும் மதசார்பின்மை கருத்தியலை நிலைநிறுத்த வேண்டும் அத்துடன் நாட்டின் மாணவர்களை மதச்சார்பற்றவர்களாக மாற்றுவதற்கு கல்வி நிறுவனங்களும் முயற்சி எடுக்க வேண்டும் இதனால் அவர்கள் மத ரீதியான ஆதிக்கத்தை எதிர்த்து நாட்டை ஒரு நலன்புரி அரசாக மாற்ற சில யோசனைகளை உருவாக்க முடியும். அவ்வாறே இன நல்லிணக்கத்தை பேணுவதற்கும், பல்வேறு மத சமூகங்களுக்கிடையில் ஏற்படும் மத முரண்பாடுகளை எதிர்த்துப் போராடுவதற்கும் அரசு விதித்துள்ள ஏற்பாடுகளை அவர்கள் கடைப்பிடிக்கும் வகையில் மக்கள் மனதில் சரியான முறையில் இக்கருத்துப் பதியப்பட வேண்டும். அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமாக இலங்கையில் மதசார்பின்மை வாதக் கருத்தயலினை நிலைநாட்டி இனங்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தனை ஏற்றப்படுத்தி இன நல்லிணக்கத்தினை கட்டியெழுப்பமுடியும். முடிவாக நோக்கின் இலங்கையில் மதசார்பான கருத்துக்கள் எல்லா மட்டங்களிலும் காணப்படுவதானது பாரிய சவாலாகவே நோக்கப்படுகின்றது இதிலிருந்து மீள்வதற்கு இந்தியாவின் மதசார்பின்மை கருத்தியலை கோட்பாட்டு ரீதியில் கொண்டுவந்து அனைத்து மதங்களையும் பாதுகாக்கும் பொறுப்பினை அரசு உறுதிப்படுத்துமிடத்து இனங்களுக்கிடையில் ஏற்படுகின்ற அல்லது ஏற்படவிருக்கும் கசப்பான நிகழ்வுகள் மறைவதற்கான சாத்தியங்கள் அதிகம் உண்டு. பௌத்த மதம் சார்பான நிலை இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டினை ஏற்படுத்த ஏதுவான காரணியாக காணப்பட்டதுடன் கடந்த கால நிகழ்வுகள் இலங்கைக்கு ஒரு சான்றாகவும் பாடமாகவும் அமையப் பெற்றது. இதன் காரணமாகவே அண்மைக்காலமாக மதசார்பின்மை தொடர்பான பரிந்துரைகள் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றமையானது குறிப்பிட்டுக்காட்ட வேண்டிய விடயமாகும்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR

## உசாத்துணைகள்

[1] கணேசலிங்கம் கே.ரீ., (2008), தென்னாசியாவின் அரசியல் கலாசாரம், சேமமடு பதிப்பகம், கொழும்பு - 11

[2] யோகராஜா. ஆ. (2020), சமகால அரசறிவியல் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம் - கொழும்பு

[3] பளீல் ஏசீம், யூசுப் இம்றான் எம்வைஎம்., (2017), அரசறிவியல் ஓர் அறிமுகம், கல்முனை வெளிவாரிப் பட்டப்படிப்பு கற்கை நிலையம்

[4] யோதலிங்கம் சி. அ. (2019), இலங்கையின் அரசியல் யாப்புகள், குமரன் புத்தக இல்லம் - கொழும்பு

[5] Katrak, N and Kulkarni, S. (2021). Unravelling the Indian Conception of Secularism : https://secularismandnonreligion.org/articles/10.5334/snr.145

[6] Tremors of the Pandemic and Beyond. Secularism and Nonreligion, https://medium.com/the-%C3%B3pinion/challenges-faced-by-secularism-in-india-661709c16ac5

[7] Mohd Aqib Asla, (2021), Concept of Secularism, https://www.legalserviceindia.com/legal/article-8742-concept-of-secularism.html

[8] Secularism in India, https://www.iilsindia.com/blogs/secularism-in-india/

[9] Quraishi SY. (09 Nov 2022), A Walk Through The Several Decades Of Indian Secularism, https://www.outlookindia.com/national/a-walk-through-the-several-decades-of-indian-secularism-magazine-235925

[10] CHRISTOPHE JAFFRELOT , (April 04 2019), The Fate of Secularism in India, https://carnegieendowment.org/2019/04/04/fate-of-secularism-in-india-pub-78689

[11] Balaji, (May 19th 2023), Secularism in India: Meaning, Features of Secularism in Indian Constitution, https://byjusexamprep.com/upsc-exam/secularism#toc-6

[12] Puja mondal, Problems of Secularism in India, https://www.yourarticlelibrary.com/india-2/problems-of-secularism-in-india-essay/4402

[13] Secularism – Its Meaning, Models and Issues, (2014 November 13), https://www.insightsonindia.com/2014/11/08/secularism-its-meaning-models-and-issues/

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR 